<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>MCOP.No.244/2024</u>**

பெயர் : ஜெயந்தி
க/பெ. : செல்வம்
தேதி : 23.03.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

நானும் எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் போகும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டாக மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நானும் எனது கணவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அணிந்து சென்றோம். நாங்கள் அணிந்து சென்றிருந்தால் அதன் விபரம் மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டிருக்கும். நாங்கள் அணியாத காரணத்தினால் தான் விபரம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் விபத்து சமயத்தில் அணிந்திருந்தால் போலீசார் விசாரணையில் கூறப்பட்டிருக்கும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரியை முந்தி செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை, நாங்கள் லாரிக்கு முன்பாக சென்றுகொண்டிருந்தோம். மனுவிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் லாரியை முந்தி செல்லும்போது விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு என்றால் அது தவறுதான். லாரிக்கு முன்பாக சென்றதினால் இந்த விபத்திற்கும், லாரிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

எனது கணவர் தான் இருசக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்ற தானே விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் எனது கணவர் மெதுவாகத்தான் சென்றார். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுனருக்குவிபத்து சமயத்தில் முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. முறையான ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச்செல்வது காப்பீடு விதிமுறை மீறல் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தை பொருத்த வரை காப்பீடு விதிமுறை மீறல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு

கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் இல்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு சான்றும் கிடையாது என்றால் அதுப்பற்றி தெரியாது. எனது கணவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றாலும், எனது கணவரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எனது கணவரின் வேலை மற்றும் வருமானத்திற்காக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் வயது, வருமானம், இழப்பு ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் இழப்பீடு அதிகம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் காப்பீடு விதிமுறை மீறல் மற்றும் இறந்துபோன செல்வத்தின் கவனக்குறைவும் அஜாக்கிரதையாலும் விபத்து ஏற்பட்டதாலும் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து இந்த மனுவை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.